## வாக்குமூலம்

## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 106/2018 |
| வழக்கு சாட்சி | : | PW6 |
| நாள் | : | 02.09.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபாகர் | ஜாதி | : | |
| தந்தை–கணவர் பெயர் | : | துரைசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

2, 3, 6 முதல் 8 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி இறப்பு. எதிரிகள் 1, 5 ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது பி.சி.என் கண்டிகையில் வசித்து வருகிறேன். நான் தற்போது கிராம நிர்வாக அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றேன். 2016ம் வருடம் திருத்தணி டவுன் கிராம நிர்வாக அதிகாரிய பணிபுரிந்து வந்தேன். இறந்த ஆறுமுகம் எனக்கு தெரியும். ஆறுமுகம் என்பவர் பிரேத பரிசோதனை செய்ய திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் கிரன்சாய், வடிவேலு, ராஜதுரை, மற்றும் கபாலி ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2 முதல் அ.த.சா.ஆ.5 வரை** ஆகும். போலிசார் என்னை அழைத்து கையெழுத்து போடும்படி சொன்னார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் நான்கு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதுல் கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.6 முதல் அ.த.சா.ஆ.9 வரை** ஆகும். அதில் என்ன எழுதியது என்ற விபரம் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

15.10.2016 அன்று காலை 10.30 மணிக்கு நானும் என் உதவியாளர் குமாரும், அலுவலகத்தில் இருந்தோம் என்றும், திருத்தணி காவல் ஆய்வாளர் எங்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு, வேலஞ்சேரி ஜங்சனில் காவல் நிலைய குற்ற எண் 640/16-ல் சம்பந்தப்பட்ட எதிரிகள் வடிவேல், ராஜதுரை ஆகியோரை கைதுசெய்திருப்பதாகவும், அதற்குச் சாட்சியாக இருக்க கூப்பிட்டார்கள் என்றும், அதற்கு நாங்கள் சம்மதித்தோம் என்றும், அவர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கிரண் தலைமையில் ஜாகீர், ராஜேஷ், பிரேம் மற்றும் கபாலி ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து முன்விரோதம் காரணமாக திருத்தணியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரை கொலைசெய்ததைப்பற்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குமாரும் கையொப்பம் செய்தோமென்றும், மேலும் வடிவேலிடமிருந்து 3 கத்திகளையும், ரத்தக்கறைபடிந்த சிமெண்ட் கலர் பேண்ட் ஒன்றும், ரத்தக்கறைபடிந்த பச்சை அரைக்கைச் சட்டை ஒன்றும், துணியார் செய்யப்பட்ட கெரெசனில் ஊறவைத்த துணிப்பந்து ஒன்றும், சிகெரெட் லைட்டர் ஒன்றும், மேற்படி இரண்டும் பாலித்தீன் கவரில் உள்ளது என்றும், இவைகளை எங்கள் முன்னிலையில் கன்னிகாபுரம் காட்டுப்பகுதியில் மறைத்துவைத்திருந்ததை அடையாளம் காட்டியதில் ஆஜர் செய்ததை மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த மகஜரில் நானும் குமாரும் கையொப்பம் இட்டோமென்றும், மேலும், 14.10.2016ம் தேதி மாலை 4 மணிக்கு மத்தூர் கேட் அருகே டி.என்.20.சி.ஏ.2527 பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளை 12.45 மணிக்கும், ஒரு மணிக்கு வேலஞ்சேரி சந்திப்பில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த மகஜரில் நானும் குமாரும் கையொப்பம் இட்டோமென்றும், அதேபோல் 15.10.2016

தேதியில் மாலை 3.00 மணிக்கு ராஜதுரையிடமிருந்து வேலஞ்சேரி சந்திப்பில் மறைத்துவைத்திருந்த இரண்டு சாம்சங் மற்றும் ஹானர் பிராண்ட் செல்போன்களை கைப்பற்றினார்கள் அந்த மகஜரில் நானும் குமாரும் கையொப்பம் செய்தோமென்றும், அதன்பிறகு 18.12.2016 காலை 10.00 மணிக்கு ஆய்வாளர் மீண்டும் எங்களை தொலைபேசியில் அழைத்து காவல் நிலையத்தில் வைத்து, கிரண் என்பவர் காஞ்சிபுரம் ஜே.எம்.2-ல் சரண்டர் ஆகியுள்ளார் என்றும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க இருப்பதாகவும், அதற்குச் சாட்சிகளாக இருக்கக் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்கள் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம் என்றும், அதேபோல் 25.12.2016 காலை 9.00 மணிக்கு கணேஷ் என்பவர் வேலூர் குற்றவியல் நீதிமன்றத்தில் சரண்டர் ஆகி, அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிப்பதாகவும், அவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்களை சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டாரெனவும் அதற்கு நாங்களும் சாட்சிகளாக இருக்க ஒத்துக்கொண்டோமென்றும், அதன்படி அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கிரணுடன் சேர்ந்து நாங்கள் முன் விரோதம் காரணமாக ஆறுமுகத்தை கொலை செய்ததை ஒப்புக்கொண்டு கொடுத்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குமாரும் கையொப்பம் செய்தோமென்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.09.02 14:11:52 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.